கரூர்.

01.06.2011

அனுப்புதல்

எஸ். **கோபாலன் கவுண்டர்,**
43, பெரியார் நகர்,
செங்குந்தபுரம்,
கரூர்–639002.

பெறுதல்

**மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள்,**
முன்னாள் முதல்வர்,
கோபாலபுரம், சென்னை.

மதிப்பிற்குரிய முத்தமிழ் வித்தகரும் தமிழினத்தலைவரும் முன்னாள் முதல்வருமான கலைஞர் பெருந்தகை அய்யா அவர்கட்கு கரூரைச் சேர்ந்த பெருமைமிக்க பூர்வீகக் குடிகளான வேட்டுவக் கவுண்டர் இனத்தைச் சேர்ந்த கோபாலன் கவுண்டர் எழுதிக் கொண்டது.

1995–96 இல் அன்றைய அனைத்திந்திய அண்ணா திராவிடமுன்னேற்றக் கழக ஆட்சியின் சுடுகாட்டு ஊழல் வழக்கை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தவரும் அன்றைய சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி கே. எ.சுவாமி அவர்கட்கு இரண்டு கடிதங்கள் பொது வழக்காக எழுதி அன்றைய காலகட்டத்தில் அந்த வழக்கு தான் அன்றைய ஆட்சி வீழ்ச்சியடைவதற்கு காரண கர்த்தாவாகிய கோபாலன் நான் தான் என்பதை தங்கட்கு அறிமுகப்படுத்த இந்த வழக்கை ஞாபகப்படுத்துவதன் மூலம் என் அறிமுகம் தங்கட்கு தெளிவாகும் என நம்புகிறேன்.

நான் இத்துடன் கோவை தினமலர் இதழில் சக்திகனல் பழனிச்சாமி அவர்களின் “பொன்னர் சங்கர் கதையில் புகையும் சர்ச்சை’’ என்னும் தலைப்பில் கொடுத்த பேட்டியின் நகலை இணைத்துள்ளேன். சக்திகனல் தனது பேட்டியில் தாங்கள் வேளாளர்களின் ஆதரவைப் பெறவேண்டும் என்ற உள்நோக்குடன் “பொன்னர் சங்கர்–தலையூர்க் காளியிடையே நடந்த வரலாற்றுப் போரை மாற்றி நாத்திகக் கருத்தைப் புகுத்திவிட்டதாக எழுதியுள்ளார்’’. ஆனால் உண்மையில் தாங்களின் நூலில் அவ்வாறு புகுத்தவில்லை என்பது நன்கு

கற்றறிந்தவர்களுக்குத் தெரியும். மேலும் மேற்படி வரலாற்று நிகழ்ச்சியைத் திரைப்படமாக எடுத்ததற்கும் வேளாள மக்களின் வாக்கைப் பெறவேண்டும் என்ற உள்நோக்குடன் எடுத்துள்ளதாகவும் கூறியுள்ளார். அவரது பேட்டியில் நான் படித்ததில் அதில் உள்ள குறைகளை சக்திகனலுக்கு நான் எழுதிய கடித நகலையும் தங்கள் பார்வைக்கு இணைத்துள்ளேன்.

1475 ஆம் ஆண்டு வாக்கில் பொன்னர் சங்கர்–தலையூர்க் காளியிடையே நடந்த வரலாற்றுப் போர் பின்பு அதுவே வேட்டுவர் – வேளாளருக்கிடையே இன்று வரை தீராப் பகையாய் தொடர்வதற்கு காரணமாக இருக்கிற இந்தக் கதையை தாங்கள் புத்தகமாக எழுதியதும், படமாக எடுத்ததும், பாடத்திட்டமாக வைத்ததும் திராவிடக் கோட்பாட்டில் வளர்ந்தவரான உங்கட்கு எந்த வகையில் ஏற்புடையது.

மேலும் இவ்வரலாற்றுச் சிறப்புச் சண்டையில் பொன்னர் சங்கர் மைத்துனர்கள் 5 பேரைத் தவிர அவர்கள் படையில் முத்தரையர்களே அதிகம். எனவேதான் முத்தரையர்கள் வைத்த 2 நடுகல்தான் இன்றையத் திருவிழா. முத்தரையர் தங்கள் மரபுப்படி நடுகல் வைத்துள்ளனர். வேளாளர்க்கு இந்த மரபு இல்லை.

பிச்சன் போருக்குப்பிறகு 200 ஆண்டுகள் கழித்துத்தான் போரைத் தவிர மற்றவைகளைக் கற்பனையாக எழுதினான். சுமார் 500 ஆண்டுகள் கழித்து தாங்கள் புத்தகமாகவும், படமாகவும் எடுத்து இவ்விரு குடிகளுக்கு இடையே மீண்டும் பகையை வளர்த்துவிட்டீர்கள். நானும் திரைப்படத்தைப் பார்த்தவன்.

1990க்கு மேல் தாங்கள் எழுதிய நூலை அவ்வினத்தைச் சேர்ந்த வா.செ. குழந்தைசாமி அவர்களுக்கு முதல் படியைக் கொடுத்து விழா எடுத்தீர்கள். இவ்வரலாற்று நிகழ்ச்சியில் இவ்விரு குடிமக்களுக்கும் பங்கு இருக்கும்போது வேளாளர் இனத்தை மட்டும் பெருமைப்படுத்தியது, செம்மொழி மாநாட்டில் பொன்னர் சங்கர் ரத ஊர்தி விட்டது கொங்கு நாட்டு வேட்டுவக் கவுண்டர் இன மக்களை மிகவும் புண்படுத்தியுள்ளது. வென்றவர்க்குத் தான் விழா எடுப்பது தாங்கள் அறிந்ததே. ஆனால் நீங்கள் விழா எடுத்தது ‘‘போரிட முடியாமல் தற்கொலை செய்து கொண்டவர்களுக்கு’’. இது தமிழக வரலாற்றில் எந்த மரபைச் சார்ந்தது ?

தங்கள் நூலிலும் திரைப்படத்திலும் தலையூர்க் காளி முடிவு சாவாகச் சித்தரித்துள்ளீர்கள். ஆனால் இறந்திருந்தால் வேட்டுவர் மரபுப்படி தலையூரில் நடுகல் நடப்பட்டிருக்கும். தலையூரில் ஒரு நடுகல் கூட இல்லை. கொங்கு நாட்டில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட நடுகல் 100 ஆகும். அனைத்தும்